இ.வி.ஆ.கொ.ச. - வருடாந்த அறிக்கை 2020



இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை

இலக்கம் 114/9, விஜேராம மாவத்தை

கொழும்பு 07,

ஸ்ரீ லங்கா

உள்ளடக்கம்

தூரநோக்கு .....**Error! Bookmark not defined.**3
செயற்பணி 3
நோக்கங்கள்.....4
குறிக்கோள்கள்..... 4
சபையின் உறுப்பினர்கள்- 2020.....6
சபையின் கட்டாய பணிகள் 11
தலைவரின் அறிக்கை 13
செயலாளரின் அறிக்கை 18

விவசாய ஆராய்ச்சி முகாமைத்துவம்.....39
விஞ்ஞானிகள் ஊக்குவிப்பு.....46
நிதியளித்தல்.....48

மனித வள அபிவிருத்தி.....49
இ. வி. ஆ. கொ. ச. இன் வெளியீடுகள்- 2020.....54
நிலையான அபிவிருத்தி இலக்குகள்(SDG)சாதனை - 2020.....54
இ. வி. ஆ. கொ. ச. இன் பதவியணி.....58
நன்றியுரையும் பாராட்டுக்களும் 61

தூரநோக்கு

இலங்கையின் சமூகப் பொருளாதார அபிவிருத்திற்கு உத்தரவாதமளித்து நிலையான விவசாய ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க முறைமையைப் பேணுதல்

செயற்பணி

கொள்கை வகுத்தமைத்தல், வசதியளித்தல், ஒருங்கிணைத்தல், கண்காணித்தல், கணிப்பீடுசெய்தல் மற்றும் தாக்கங்களை மதிப்பீடுசெய்தல் முதலியவற்றினூடாக விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்க அம்சங்கள் தேசிய அபிவிருத்திக்கொள்கைகளை நோக்கி நகர்வதை உறுதிசெய்தல்

நோக்கங்கள்

நோக்கம் 1: விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்க அம்சங்களை தேசிய குறிக்கோள்களுடன் பரிட்சயப்படச்செய்தல்

நோக்கம் 2: தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமையில் ஆற்றல் அபிவிருத்தியை மேம்படச்செய்தல்

நோக்கம் 3: உலகத் தர ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்க அந்தஸ்துகளை அடைதல்

நோக்கம் 4: நிரல் முகவர்நிலையங்களில் தொடர் செயலாற்றுகை மதிப்பீட்டை மேம்படச்செய்தல்

நோக்கம் 5: தேசிய விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்க அம்சங்கள் தொடர்பான தகவல் பரம்பலை மேம்படச்செய்தலும் மற்றும் அத்தகைய தகவல்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதலும்

நோக்கம் 6: NARSஇன் நிமித்தம் இ.வி.ஆ.கொ.ச. நிறுவன சார் ஆற்றலை வலுப்படுத்துதல்

இ.வி.ஆ.கொ.ச. குறிக்கோள்கள்

1. விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்க அம்சங்களில் சிறப்புத்தன்மையை அடைதல்
2. தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலின் குறிக்கோளை அடையும் பொருட்டு விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்க அம்சங்களைப் பரிட்சயப்படச்செய்தல்
3. தேசிய விவசாய ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க முறைமையின் (விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம்) ஆற்றலை அபிவிருத்தி செய்தல்
4. விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவும் பொருட்டு தேவை மைய உயர்ந்த ஆராய்ச்சி நியமங்களை மேம்படச்செய்தல்

5. உலகத் தர ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்க அந்தஸ்துகளை அடையும் பொருட்டு சர்வதேச, பிராந்திய மற்றும் உள்நாட்டு ரீதியான கூட்டுறவை மேம்படச்செய்தல்

6. தேசிய ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்க அம்சங்கள் பற்றிய நிகழ்ச்சித் திட்டங்களினதும் நிறுவனங்களினதும் முன்னேற்றத்தைக் கண்காணித்து மதிப்பிடுதல்

7. தேசிய விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்க அம்சங்கள் பற்றிய நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான உரிய தகவல்களைப் பரம்பச்செய்தலும் அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதலும்

8. தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலின் குறிக்கோளை அடையும் பொருட்டு இ.வி.ஆ.கொ.ச. நிறுவன சார் ஆற்றலை வலுப்படுத்துதல்

2020ஆம் ஆண்டிற்கான சபை உறுப்பினர்கள் பற்றிய விபரங்கள்

1. பேராசிரியர் காமினி சேனாநாயக்க, தலைவர், இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை

2. கலாநிதி எஸ்.எச்.எஸ். அஜந்த த சில்வா, மேலதிக செயலாளர்(விவசாய தொழில் நுட்பம்),கமத்தொழில் அமைச்சு

3. திரு பி.ஜி.எஸ்.எச். குமார, பிரதிப் பணிப்பாளர், கருத் திட்ட முகாமைத்துவ கண்காணிப்புத் திணைக்களம், நிதி அமைச்சு

4. கலாநிதி டப்ளியூ.எம்.டப்ளியூ. வீரகோன், பணிப்பாளர் நாயகம், விவசாயத் திணைக்களம்

5. கலாநிதி கே.எம்.ஏ. பண்டார, வனசீவராசிகள் மேலதிகப் பாதுகாப்பு அதிபதி (ஆராய்ச்சி, கல்வி மற்றும் அபிவிருத்தி),வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

6. கலாநிதி எச்.எம்.பி. கித்சிறி, பணிப்பாளர் நாயகம், தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிலையம்

7. கலாநிதி (திருமதி)ஜி.ஏ. குணவர்த்தன, பிரதிப் பணிப்பாளர் (மிருக மருத்துவ ஆராய்ச்சி), மிருக மருத்துவ மற்றும் ஆராய்ச்சி நிறுவகம், கன்னொறுவ

8. திரு சித்ரலால் ஜயவர்த்தன, பொருளியலாளர், இலங்கைத் துறை-முகங்கள் அதிகார சபை

9. கலாநிதி எல்.எஸ்.எச். ஹெட்டிஆராச்சி, பணிப்பாளர், தேயிலை ஆராய்ச்சி நிறுவகம்

10. திருமதி ஜே.எம்.ரீ. ஜயசுந்தர, மேலதிக செயலாளர், பெருந்-தோட்டங்கள் அமைச்சு

11. திரு பிரபாத் விமல் குமார, செயலாளர் / பணிப்பாளர்,இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை

சபையின் கூட்டங்களுக்கு சபை உறுப்பினர்கள் சமூகமளித்தல் பற்றிய விபரங்கள்

இல.	பெயர்	226-வது கூட்டம் 27.02.2020	227-வது கூட்டம் 21.05.2020	228-வது கூட்டம் 16.06.2020	229-வது கூட்டம் 21.07.2020	230-வது கூட்டம் 18.08.2020	231-வது கூட்டம் 15.09.2020	232-வது கூட்டம் 20.10.2020	233-வது கூட்டம் 15.12.2020
1	பேராசிரியர் காமினி சேனாநாயக்க	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்
2	திரு பிரபாத் விமல் குமார	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்
3	கலாநிதி கே.எம்.ஏ. பண்டார	சமூகமளிக்கவில்லை	சமூகமளிக்கவில்லை	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளிக்கவில்லை	சமூகமளிக்கவில்லை
4	கலாநிதி ஜி.ஏ. குணவர்த்தன	சமூகமளித் திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளிக்கவில்லை	சமூகமளிக்கவில்லை
5	கலாநிதி டப்ளியூ.எம்.டப்ளியூ. விரகோன்	சமூகமளித்திருந்தார்	சமூகமளிக்கவில்லை	சமூகமளிக்கவில்லை	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளிக்கவில்லை
6	கலாநிதி எச்.எம்.பி. கித்சிறி	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளிக்கவில்லை	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்
7	திரு பி.ஜி.எஸ்.எச். குமார	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளிக்கவில்லை	சமூகமளித்திருந்தார்
8	கலாநிதி எஸ்.எச்.எஸ். அஜந்த த சில்வா	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளிக்கவில்லை	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்
9	திரு சித்ரலால் ஜயவர்த்தன	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்
10	கலாநிதி எல்.எஸ்.கே. ஹெட்டிஆராச்சி	X	X	சமூகமளிக்கவில்லை	சமூகமளித்திருந்தார்	சமூகமளிக்கவில்லை	சமூகமளிக்கவில்லை	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்
11	திருமதி ஜே.எம்.ரீ. ஜயசுந்தர	X	X	சமூகமளித்திருந்தார்	சமூகமளிக்கவில்லை	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்	சமூகமளிக்கவில்லை

நியமிக்கப்படவில்லை | X |

2020ஆம் ஆண்டு காலப் பகுதியில் நடைபெற்ற சபைக் கூட்டங்கள் பற்றிய விபரம்

2020ஆம் ஆண்டு காலப் பகுதியில்,எட்டு சபைக் கூட்டங்கள் நடத்தப் பட்டன. 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பேராசிரியர் காமினி சேனாநாயக்க அவர்கள் இந்த சபையின் தலைவராக இருந்தார்கள். திரு பிரபாத் விமல் குமார அவர்கள் 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்த சபையின் செயலாளராக / பணிப்பாளராக பணியாற்றினார்கள்.

2020ஆம் ஆண்டு காலப் பகுதியில் நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் பற்றிய விபரங்கள்

நிதி மற்றும் நிருவாக விடயங்கள் பற்றி கலந்துரையாடும் நிமித்தம் இந்த இ.வி.ஆ.கொ.ச. இன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு (க.மு.கு.) 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இரண்டு கூட்டங்களை நடத்தியது.

பெயர்	நிறுவனம்	60-வது கூட்டம் - 20.07.2020	61-வது கூட்டம் - 22.12.2020
திரு பி.ஜி.எஸ்.எச். குமார	பிரதிப் பணிப்பாளர், கருத் திட்ட முகாமைத்துவ கண்காணிப்புத் திணைக்களம், நிதி பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்
கலாநிதி எஸ்.எச்.எஸ். அஜந்த த சில்வா	மேலதிக செயலாளர், கமத்தொழில் அமைச்சு	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்
கலாநிதி எச்.எம்.பி. கித்சிறி	பணிப்பாளர் நாயகம், NARA	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்

திருமதி உதேனி பெரேரா	கணக்காய்வு அத்தியட்சகர், விவசாய, கமநல சபை	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்
திரு யூ.எஸ்.எல். குமார	உள்ளகக் கணக்காய்வாளர், மகாவலி, விவசாய, நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு	சமூகமளித்திருந்தார்	சமூகமளித்திருந்தார்

அறிமுகம்

இலங்கைவிவசாயஆராய்ச்சிக்கொள்கைசபை (இ.வி.ஆ.கொ.ச.) 1987 இன் 47 ஆம்இலக்கஇ.வி.ஆ.கொ.ச.சட்டம்சட்டவாக்கம்பெற்றதைத் தொடர்ந்து 1987 ஆம்ஆண்டுதிசம்பர்மாதம் 22 ஆம்திகதிகமத்தொழில்அமைச்சின்கீழ்தாபிக்கப்பட்டது. அன்றிலிருந்து, இ.வி.ஆ.கொ.ச. தேசியவிவசாயஆராய்ச்சிமுறைமையில் உள்ள(NARS)விவசாயஆராய்ச்சி செயற்பாட்டு விடயங்களின் நிமித்தம்உதவுவதில்காத்திரமாகஈடுபட்டுவந்துள்ளது.

NARSமுறைமையில்உகந்தஒருசூழலைஏற்படுத்துவதன்ஊடாகவிவசாயத் துறையில்ஆராய்ச்சியையும், அபிவிருத்தியையும்வலுப்படுத்த கொள்கைகளையும்

மற்றும்திறமுறைத்திட்டங்களையும்தயாரித்துவழங்குவதுஇ.வி.ஆ.கொ.ச. இன்கட்டாயபணிகளில் ஒரு பணியாகும். ஆராய்ச்சி சார் முன்னுரிமைப்பிரிவுகளைஇனங்காணுதல்,

அந்தந்ததுறைகளில்தகவல்பகிர்வின்

ஊடாகபரஸ்பரகூட்டுறவுக்குஉதவுதல்,

ஆராய்ச்சிநடவடிக்கையில்எதிர்நோக்கும்பிரச்சினைகளுக்குதீர்வுகாணுதல், அந்தந்த குழுக்களின்செயற்பாடுகளைமேம்படுத்துவதில்பங்களிப்புச்செய்தல்என்பன போன்ற பணிகள்இந்தஇ.வி.ஆ.கொ.ச. இன்பிரதான பணிகளாகும்.

தற்பொழுதுஇந்த சபை மூலம் தாபித்துள்ள பன்னிரெண்டுதேசியகுழுக்கள்காணப்படுகின்றன.

i. விவசாயஉயிரியல்தொழில்நுட்பம்பற்றியதேசியகுழு (NCAB)
ii. விவசாயஎந்திரஉபகரணங்கள்பற்றியதேசியகுழு (NCAM)
iii. நீரியல்வளமற்றும்கடற்றொழில்பற்றியதேசியகுழு (NCAR)
iv. பூந்தாவரங்கள்வளர்ப்புஆராய்ச்சிமற்றும்அபிவிருத்திபற்றியதேசியகுழு (NCFRD)
v. வனங்கள்பற்றியதேசியகுழு (NCF)
vi. கால்நடைகள்மற்றும்கோழிவளர்ப்புபற்றியதேசியகுழு (NCLP)
vii. இயற்கைவளங்கள்முகாமைத்துவம்,நிலைபெறுதகுவிவசாயம்மற்றும்காலநிலைமாற்றம்பற்றியதேசியகுழு(NCNRMSACC)
viii. இயற்கைவிவசாயம்பற்றியதேசியகுழு (NCOA)
ix. பயிர்கள் மேம்பாடு மற்றும் விவசாயம் பற்றிய தேசிய குழு (NCPB)
x. தாவரப்பாதுகாப்புபற்றியதேசியகுழு (NCPP)
xi. அறுவடைக்குப்பின்-தொழில்நுட்பம்மற்றும் மானிட போஷாக்கு பற்றிய தேசிய குழு (NCPHTHN)
xii. சமூகப்பொருளாதாரம்மற்றும் கொள்கைப்பகுப்பாய்வுபற்றியதேசியகுழு (NCSEPA)

இவை தவிர, விஷேட விஞ்ஞான சேவைகளின் நிமித்தம் பின்வருவன போன்ற விஷேட விஞ்ஞான குழுக்கள் நியமிக்கப்பட்டன.

i. உணவு மற்றும் விவசாய இலங்கை சஞ்சிகை பதிப்பு சபை
ii. ஆராய்ச்சி சார்ந்த கொடுப்பனவுகள் பற்றிய உப குழுக்கள்

சபையின் கட்டாய பணிகள்

1. விவசாயஆராய்ச்சிவிடயங்களைஒழுங்கமைத்தல், ஒருங்கிணைத்தல், திட்டமிடுதல்மற்றும்நிறைவேற்றுதல், மற்றும்அமைச்சரினால்குறிப்பீடுசெய்யப்படாலம்எனும்சம்பந்தப்பட்டஅத்தகையஏனையவிடயங்கள்முதலியசகலவிடயங்கள்தொடர்பிலும்அரசாங்கத்திற்குஆலோசனைவழங்குதல்.
2. தேசியஆராய்ச்சிக்கொள்கைகளையும் மற்றும் முன்னுரிமை சார்ந்த அம்சங்களையும்வகுத்தமைத்தல்.
3. தேசியஅபிவிருத்திக்குறிக்கோள்களைமேலும்விரிவாக்கும்நோக்கில் விவசாயஆராய்ச்சியின்ஒட்டுமொத்தக்குறிக்கோள்களையும் மற்றும் நோக்கெல்லையையும்வரையறுத்தல்.
4. விவசாயஆராய்ச்சிநிறுவகங்களுக்கும்மற்றும்தாபனங்களுக்கும்தேவையானநிதி, மனிதவலுமற்றும்பௌதீகவளங்கள்என்பன தொடர்பிலும் மற்றும்அத்தகையநிறுவனங்களினதும், தாபனங்களினதும்ஊழியர்களின்சேவை தொடர்பானநியதிகள்மற்றும்நிபந்தனைகள்தொடர்பிலும்பொருத்தமானஉரியஅதிகாரசபைகளுக்குசிபாரிசுகளைமுன்வைத்தல்.
5. நிறுவனம்மற்றும்திணைக்களம்சார்ந்தவிவசாயஆராய்ச்சிநிகழ்ச்சித்திட்டங்களைமீளாய்வுசெய்துநிதிமற்றும்திட்டமிடல்விடயத்திற்குப் பொறுப்புடையஅமைச்சரின்அமைச்சுக்கு, நிதியளிப்பின் நிமித்தம் முன்னுரிமை சார்ந்த விடயங்கள்தொடர்பானசிபாரிசுகளைமுன்வைத்தல்.
6. விவசாயஆராய்ச்சி நடவடிக்கையில்சிறப்புத்தன்மையைஊக்குவித்துஅதன் நிமித்தம் உதவுதல்.
7. அரசாங்கத்திற்கும்மற்றும்விவசாயஆராய்ச்சிநிறுவகங்களுக்கும்இடையில்ஒருதொடர்பாடல்மார்க்கமாகத்தொழிற்படுதல்.

8. நிறுவகங்களுக்குஇடையில்விவசாயஆராய்ச்சிக்கருத் திட்டங்களைஒழுங்கமைத்துஅத்தகையகருத் திட்டங்களுக்குநிதியளித்தல்.
9. முழுமொத்தவிவசாயஆராய்ச்சித்துறைக்கானசேவைகளின் நிமித்தம்விஷேடவிஞ்ஞானசேவைகளைஒழுங்கமைத்து அந்த சேவைகளுக்குநிதியளித்தல்.
10. விவசாயஆராய்ச்சிநிறுவகங்களுக்குஇடையில்நிலவும்உறவுகளைதே சியமற்றும்சர்வதேசஅளவில்மேம்படச்செய்தல்.
11. விவசாயஆராய்ச்சியுடன்தொடர்புடையநிறுவகங்களுக்குஇடையில் காணப்படுகின்ற பிரச்சினைகள், தேசியமற்றும்சர்வதேசவிடய அம்சங்கள்என்பனதொடர்பானமாநாடுகளையும்மற்றும்கருத்தரைங் குகளையும்ஏற்பாடுசெய்துவழங்குதல்.
12. விவசாயஆராய்ச்சிஊழியர்களுக்குபட்டப்பின்படிப்பு தொடர்பானபயிற்சிகளைஒழுங்கமைத்தல்மற்றும் வெளிநாடுகளில் அங்கீகரித்த ஆராய்ச்சி சார்ந்தநிறுவகங்களின்விஞ்ஞானிகளைப்பரிமாற்றிக்கொள்ளல்.
13. விவசாயஆராய்ச்சிக்கருத் திட்டங்களினதும், மற்றும்நிறுவகங்களினதும்மற்றும்பிரிவுகளினதும்செயலாற்றுகை யைஅவ்வப்பொழுதுமீளாய்வுசெய்தல்.

தலைவரின் அறிக்கை

இ.வி.ஆ.கொ.ச. 2020 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் புதிய ஒரு இலக்கை நோக்கி தனது கடமைப் பணிகளை ஆரம்பித்தது. ஆனாலும், திட்டமிடப் பட்டிருந்த அநேகமான செயற்பாடுகள் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அளவில் கொவிட்-19 தொற்றுநோய் நிலவியதன் விளைவாகமிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. இந்த தொற்றுநோய் குறிப்பாக உணவுப் பாதுகாப்பிலும் மற்றும் விவசாய ஆராய்ச்சி சார்ந்த செயற்பாடுகளிலும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியது. தற்பொழுது காணப்படுகின்ற இந்த நிலைமைக்கும் மற்றும் நாட்டில் விவசாய அபிவிருத்தியை மீளக்கட்டியெழுப்புவதற்கும் பயன்தகு தீர்வொன்றாக, விவசாயத் துறையில் கூர்மையான ஒருV-வடிவ மீட்பு முறையைப் பெற்றுக் கொள்ளும் முகமாக இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை குறுங்கால மற்றும் நீண்டகால ஆராய்ச்சி முன்னுரிமைகளை உருவாக்கி செயற்படுத்தியது. நிலவிய இந்த தொற்றுநோய் நிலவரத்தினால், நாட்டிலுள்ள விவசாய நிபுணர்களுடன் மெய்நிகர் கூட்டங்கள் நடத்தப்பட்டன.உணவுப் பயிர்கள், பெருந்தோட்டப் பயிர்கள், காடுகள் வளர்ப்பு, மீன்பிடி மற்றும் நீரியல் உயிரினங்கள் வளர்ப்பு, கால்நடைகள் வளர்ப்பு மற்றும் கோழி வளர்ப்பு மற்றும் பூந்தாவரங்கள் வளர்ப்பு போன்ற விவசாயத் துறையில் அடங்கும் அனைத்து பிரதான ஆறு பிரிவுகளுக்கும் குறுங்கால மற்றும் நடுத்தர கால ஆரய்ச்சி சார்ந்த முன்னுரிமை உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டன. விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் மற்றும் அந்த விவசாயிகளை பண்ணைத் தொழில் முயற்சிகளில் ஈடுபடுத்துவதற்கும் என்ற 'வளமான சுபீட்சமான தூரநோக்காக' விளங்குகின்ற இந்த நாட்டின் கொள்கையை கருத்திற் கொண்டு இந்த ஆராய்ச்சி சார்ந்த முன்னுரிமை திட்டங்கள்

உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டன. ஆராய்ச்சி சார்ந்த குறுங்கால செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கும் அந்த செயற்பாட்டுத் திட்டங்களை பின்பற்றுவதற்கும் என குறுங்கால மற்றும் நடுத்தர கால ஆராய்ச்சி முன்னுரிமைகள் ஆவணம் உரிய அமைச்சுக்களின் கொள்கை ஆக்குநர்கள், விஞ்ஞானிகள், நிபுணர்கள், அக்கறையுடைய தரப்புகள் ஆகியோர் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இலங்கையின் தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டத்திற்கான (NARP) குறுங் கால மற்றும் நடுத்தர கால ஆராய்ச்சி முன்னுரிமைகளின் பிரகாரம், தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமை (NARS) நிறுவனங்களிடமிருந்து 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஆராய்ச்சி முன்மொழிவுப் பிரேரணைகள் அழைக்கப்பட்டன. குறித்த நிகழ்ச்சித் திட்டம் NARS இன் விவசாயம் சார் ஆராய்ச்சிக் கருத் திட்டங்களை மேற்கொள்வதற்கு நிதி அளிக்கின்ற அதே நேரம் விவசாய செயற்பாடுகள் / விவசாயம் சம்பந்தமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்ற தேசிய பல்கலைக்கழக முறைமைக்கும் (NUS) நிதி அளிக்கின்றது. விவசாயம் சம்பந்தமான ஆராய்ச்சி செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்ற விவசாயத் திணைக்களம், ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் மற்றும் தேசிய பல்கலைக்கழகங்கள் என்பவற்றுக்கு தற்பொழுது நிதிகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. கருத் திட்டங்கள், 1 முதல் 3 ஆண்டுகள் வரையான ஒரு காலப் பகுதிற்கு வருடாந்த ரீதியில் வழங்கப்படுகின்றன. NARS மற்றும் NUS ஆகியவற்றின் கீழுள்ள அந்தந்த உரிய நிறுவனங்கள் இ.வி.ஆ.கொ.ச. சபைக்கு சமர்ப்பித்த ஆராய்ச்சி சார்ந்த கருத் திட்டப் பிரேரணைகள், நிதியிடுகை நிமித்தம் சிபாரிசு செய்வதற்காக வேண்டி இ.வி.ஆ.கொ.ச. சபையில் தொழிற்படுகின்ற அந்தந்த உரிய தேசிய குழுக்கள் தெரிவு செய்த வெளிவாரி மீளாய்வு நிபுணர்களினால் மீளாய்வு செய்யப்படுகின்றன.

இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபைக்கு அதிகாரபூர்வமாக ஆணை வழங்கப்பட்டிருக்கின்ற கட்டாய பணிகளுக்கு இணங்க, விவசாய ஆராய்ச்சிக் கருத் திட்டங்கள், நிறுவகங்கள் மற்றும் பிரிவுகள் என்பன மீளாய்வு செய்யப் படுதல் வேண்டும். இது தொடர்பாக, இ.வி.ஆ.கொ.ச. வெளிவாரி மீளாய்வுக் குழுக்களின் உதவியுடன் 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 04 நிறுவனங்களை மீளாய்வுக்கு உட்படுத்தி தனது மீளாய்வு பணியை நிறைவு செய்துள்ளது. தேசிய தாவர பூங்காக்கள் திணைக்களம்(DNBG),இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை (இ.வி.ஆ.கொ.ச.) வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் (FCD) ஆராய்ச்சிப் பிரிவுமற்றும் இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத் தாபனத்தின் (SLCC) ஆராய்ச்சிப் பிரிவு என்பன மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. நகல் மீளாய்வு அறிக்கைகள் அந்தந்த நிறுவனங்களுக்கும் மற்றும் இ.வி.ஆ.கொ.ச. சபைக்கும் அந்த அறிக்கைகள் முடிவு செய்யப்படுவதற்கு முன்னர் அந்தந்த நிறுவனங்கள் மற்றும் இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை ஆகியவற்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.இ.வி.ஆ.கொ.ச. சபையும் மற்றும் நிறுவனங்களும் முன்வைத்த பொருத்தமான கருத்துரைகள் குறித்த அந்த அறிக்கைகளில் கூட்டிணைக்கப்பட்டதன் பின்னர் இறுதி மீளாய்வு அறிக்கைகள் அந்தந்த மீளாய்வு நிபுணர்களினால் தயாரிக்கப்பட்டன. குறித்த இறுதி மீளாய்வு அறிக்கைகள் அந்தந்த அமைச்சின் செயலாளர்களுக்கும், அந்தந்த உரிய திணைக்களங்களின் பணிப்பாளர் நாயகங்களுக்கும், திறைசேரிக்கும்,அந்தந்த நிறுவன பணிப்பாளர்களுக்கும் செயற்படுத்துகை சிபாரிசுகள் நிமித்தம் அந்தந்த நிறுவனங்கள் பற்றிய இறுதி மீளாய்வு அறிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்டன.

NARSமுறைமைக்கான மனித வளங்கள் பற்றிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், பதினான்கு மாணவர்கள் மலேசியா புத்ரா பல்கலைக்

கழகத்திற்கும் (09), காஷேஆர்ஸ்சார்ட்டு பல்கலைக் கழகத்திற்கும் (01) மற்றும் பிலிபைன் பல்கலைக் கழகத்திற்கும் (04)புலமைப் பரிசில்கள் நிமித்தம் அனுப்பி வைக்கப்பட்டனர். இ.வி.ஆ.கொ.ச. அனுமதிகளுக்கான புலமைபரிசில்களுக்கு தேவையான ஒருங்கிணைப்பை செய்து வழங்கிய அதே நேரம் 2020 ஆம் ஆண்டு முழுதிலும் குறித்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு நிதிகள் கிடைப்பதையும் உறுதிசெய்துள்ளது. எனவே, புலமைப் பரிசில் பெறுநர்களுக்கு செலுத்த வேண்டிய சகல கொடுப்பனவுகளும் செலுத்தப் பட்டன. வெளிநாடுகளிலுள்ள அந்தந்த பல்கலைக் கழகங்களில் தத்தமது கற்கைகளை தொடர்கின்ற புலமைப் பரிசில் பெறுநர்களினதும் மற்றும் கொவிட்-19 தொற்றுநோய் நிலவரத்தால் மீண்டும் இலங்கைக்கு திரும்பி வந்துள்ள புலமைப் பரிசில் பெறுநர்களினதும் முன்னேற்ற விடயங்கள் இ.வி.ஆ.கொ.ச. சபையினால் கண்காணிக்கப்படுகின்றன. அந்த புலமைப் பரிசில் பெறுநர்கள் தொடர்பான பிரச்சினை விடயங்கள் வழமையாக இ.வி.ஆ.கொ.ச. சபைக்கு அறிக்கையிடப்படுகின்றன. புலமைப் பரிசில் பெறுகின்ற சகல 76 மாணவர்களுக்கும் கொவிட்-19 தொற்றுநோய் காலப் பகுதியில் தேவையான ஒருங்கிணைப்பு வசதி இ.வி.ஆ.கொ.ச. சபையின் மூலமாக செய்து கொடுக்கப்பட்டது.

நாட்டின் மிகவும் மதிப்பு வாய்ந்த மிக சிரேஷ்ட தொழில் நிபுணர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள சகல விவசாய விஞ்ஞான குழுக்களும் இந்த நெருக்கடியான காலப் பகுதியில், தமது விலை மதிக்க முடியாத கால நேரத்தை அர்ப்பணித்து மிகவும் பெறுமதியான ஒரு பணியை நிறைவேற்றி வருகின்றன. அதிகளவான தொடர்பும் மற்றும் ஊக்குவிப்பும் தொடர்ந்தும் இருக்க வேண்டும். எல்லா வகை இடர்களையும் உடைய ஒரு புதிய வழமையான நிலைமையில், பல நிபுணர்கள் சூம் அப்அதே போல்ஸ்கைப் (Zoom App, Skype) போன்ற புதிய தொடர்பாடல் தொழில் நுட்பங்கள் ஊடாக தமது அனுபவங்களை பகிர்ந்து கொள்கின்றனர். நான்

இந்த சபையின் தலைவர் என்ற வகையில் வித்தியாசமான குழுக்களில் பணி செய்வதன் ஊடாக அவர்கள் வழங்குகின்ற அவர்களின் பெறுமதிமிக்க பங்களிப்பை ஏற்று மதிக்க கடமைப்பட்டுள்ளேன்.

இந்த நெருக்கடியான ஒரு கால கட்டத்தில் இந்த சபையை சுமுகமாக நிருவகிப்பதற்கு தமது ஒத்துழைப்பை நல்கிய சபையினதுஅனைத்து உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். ஆராய்ச்சி முகாமைத்துவ பணிப்பாளர்மற்றும்பிரதி பணிப்பாளர்ஆகியோரினதும், இ.வி.ஆ.கொ.ச. சிரேஷ்ட விஞ்ஞானிகள், ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள், நிருவாக உதவிப் பணிப்பாளர், பதில் கணக்காளர் ஆகியோரும் மற்றும் ஏனைய சகல ஊழியர்களும் தமது கடமைகளை நிறைவேற்றுவதில் கடுமையாக உழைத்தமைக்கும் மற்றும் சிறப்பாக செயலாற்றியமைக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

பேராசிரியர் காமினி சேனாநாயக்க
தலைவர்,
இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை

செயலாளரின் அறிக்கை

1987ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க சட்டத்திற்கு இணங்க, இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபைக்கு, ஆராய்ச்சி மற்றும் மனித வள அபிவிருத்தியை ஒருங்கிணைப்பதற்கும், தேசிய விவசாய முறைமையில் (NARS) உள்ள விவசாய ஆராய்ச்சி ஊக்குவிப்புக்கு மிகச்சிறந்த முறையில் வசதி செய்வதற்கும் ஆணை வழங்கப்பட்டுள்ளது. அன்றிலிருந்து இந்த இ.வி.ஆ.கொ.ச. NARS முறைமைக்கு உதவுவதில் காத்திரமாக ஈடுபட்டுள்ள அதே வேளையில் NARS முறைமை விஞ்ஞானிகளுக்கு ஆராய்ச்சி சார்ந்த மானியங்களையும்மற்றும்மனித வளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களையும் வழங்கி வருகின்றது. ஆராய்ச்சிக் கொள்கைகளையும் மற்றும் ஆராய்ச்சி முன்னுரிமை பிரிவுகளையும் இனங்காணுதல்,நாட்டில் விவசாயத் துறையை மேம்படுத்துதல் என்பன இ.வி.ஆ.கொ.ச. சபையின் பிரதான பணிகளாகும். 2020ஆம் ஆண்டு காலப் பகுதியில், குறுங்கால மற்றும் நடுத் தர கால ஆராய்ச்சி முன்னுரிமைகள், நாட்டின் தெளிவான கொள்கைகளை கருத்திற் கொண்டு வெளிப்படுத்தப்பட்டன. விவசாயத் துறையிலுள்ள நிபுணர்களின் நிபுணத்துவ உதவியைப் பெற்றுக்கொண்டு பன்னிரெண்டு தேசிய குழுக்கள் இந்த சபையினால் தாபிக்கப்பட்டன. NARP பிரேரணைகளை மதிப்பிடுவதற்கும் மற்றும் குறுங்கால மற்றும் நடுத் தர கால ஆராய்ச்சி முன்னுரிமைகளை அபிவிருத்தி செய்வதற்கும் 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில், மெய்நிகர் கூட்டங்கள் ஊடாக தேசிய குழுக்கள் இயங்கின. இந்த குழுக்கள் 32 NARP சார் புதிய பிரேரணைகளை மதிப்பீடு செய்து 29 பிரேரணைகளை 2021 NARP நிகழ்ச்சித் திட்டத்திற்கு சிபாரிசு செய்தது. இ.வி.ஆ.கொ.ச. அனுமதித்த ஆராய்ச்சி முன்னுரிமை விடயங்களை சகல நிறுவனங்களும் பின்பற்றுவதாக, 2020 ஆம் ஆண்டில், மேற்கொள்ளப்பட்ட சகல NARS நிறுவனங்களினதும் செயல் திட்டங்களின் பகுப்பாய்வு சுட்டிக் காட்டியது. அந்த குழுக்கள் ஆராய்ச்சி முடிவுகளை பரம்பல் செய்வதற்கும் ஆராய்ச்சி விடயங்களை கலந்துரையாடுவதற்கும்

என விஞ்ஞானிகளுக்கும் மற்றும் அக்கறையுடைய தரப்புகளுக்கும் நல்ல ஒரு தளத்தை ஏற்படுத்துவதற்கும் ஒரு தேசிய மெய்நிகர் கருத்தரங்கை ஏற்பாடு செய்து நடத்தின.

NARSநிறுவனங்களில் உள்ள மனித வளங்களை அபிவிருத்தி செய்வதற்கு என அமைச்சரவை அங்கீகரித்த ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணங்க, 2020 ஆம் ஆண்டில் மேலும் விண்ணப்பதாரர்களின் தெரிவுகள் இடம்பெற்றன. தத்தமது பட்டப்பின்படிப்புகளை தொடரும் முகமாக 16 விண்ணப்பதாரர்கள் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பப் பட்டனர்.

தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமையின் ஆராய்ச்சித் தரவுத் தளம் பற்றிய விபரங்களை சேகரித்து பகுப்பாய்வு செய்வது இ.வி.ஆ.கொ.ச. இன் மிகவும் முக்கியமான கட்டாயமான பணிகளில் ஒரு பணியாகும். பெருந்தோட்டம், பெருந்தோட்டம் சாராததுறைகள்,மீன்பிடிகள், கால்-நடைகள், காடுகள் வளர்ப்பு மற்றும் பூந்தாவரங்கள் வளர்ப்பு முதலிய பிரிவுகளை உள்ளடக்கி, வித்தியாசமான அமைச்சுக்களின் கீழுள்ள 25 ஆராய்ச்சி நிறுவகங்களில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவருடாந்தம்அதிகளவு அரச நிதிகள் ஒதுக்கப்படுகின்றன. விவசாயத்தில் மேற்குறித்த துறைகளில் ஆராய்ச்சி சார்ந்த தேசிய முன்னுரிமைகளை இனங்காணும் பொறுப்புப் பணி ஒப்படைக்கப்பட்டுள்ள ஒரேயொரு நிறுவனம் இந்தஇ. வி.ஆ.கொ.ச. சபையாகும். ஆகையால், சரியான உகந்த தீர்மானங்களை எடுப்பதில் சம்பந்தப்படும் ஆராய்ச்சி முகாமையாளர்களுக்கும்மற்றும்ஆராய்ச்சியாளர்களுக்கும் அதே போல்பொதுத் திறைசேரிக்கும் ஒரு முகாமைத்துவ கருவியாக பயன்படுத்தும் பொருட்டு, ஆராய்ச்சிக் கருப்பொருட்களையும் மற்றும்

ஏனைய தகவல்களையும் சேகரிப்பது மிகவும் அவசியமாகும். நாட்டின் விவசாயம் சார் ஆராய்ச்சி நிகழ்ச்சி நிரலில் தேவையான மாற்றங்களை கொண்டுவருதற்கு இந்தப் பகுப்பாய்வு, பல முக்கிய செய்திகளை ஆராய்ச்சி முகாமையாளர்களுக்கு சென்றடையச்செய்துள்ளது. மிகவும் பயனுள்ள மற்றும் அவசர ஆராய்ச்சி நிகழ்ச்சி நிரல்களுக்கான வளங்கள் ஒதுக்கீட்டை சீர்படுத்துவதற்கான தேவை, ஆராய்ச்சி சார்ந்த பிரிவுகள், ஆராய்ச்சி முன்னுரிமைகள் என்பவற்றின் அடிப்படையில், ஆராய்ச்சியில் நிலவும் இடைவெளிகளை இனங்காணும் செயல் நடவடிக்கையில் விவசாய திணைக்களத்திற்கும், பயிர் ஆராய்ச்சி நிறுவகங்களின் பணிப்பாளர்களுக்கும், அந்தந்த அமைச்சுக்களுக்கும் மற்றும் பொதுத் திறைசேரிக்கும் இந்தப் பகுப்பாய்வு பயனுள்ளதாகும். 25 NARS நிறுவகங்களின் 2020 ஆம் ஆண்டிற்கான ஆராய்ச்சி சார்ந்த செயல் திட்டங்களை இ.வி.ஆ.கொ.ச. பகுப்பாய்வு செய்தது. மேலும் இந்த சபை அந்த நிறுவகங்களின் முன்னேற்றத்தையும் கண்காணித்தது.

மேலும், வெளிவாரி மீளாய்வுக் குழுக்களின் தொழில் நுட்ப உதவியைக் கொண்டு 04 ஆராய்ச்சி நிறுவகங்கள் 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. மேலும், தேசிய தாவர பூங்காக்கள் திணைக்களம், (DNBG), இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை (இ.வி.ஆ.கொ.ச.), வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் (FCD) ஆராய்ச்சி பிரிவு, இலங்கை மர முந்திரிகை கூட்டுத் தாபனத்தின் (SLCC) ஆராய்ச்சி பிரிவு முதலியவையும் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. நிறுவகங்களின் மீளாய்வு அறிக்கைகள் அந்தந்த அமைச்சுகளின் செயலாளர்களுக்கும், திணைக்களங்களின் பணிப்பாளர் நாயகங்களுக்கும், திறைசேரிக்கும்மற்றும் அந்தந்த நிறுவகங்களின் பணிப்பாளர்களுக்கும் சிபாரிசுகளை செயற்படுத்தும் முகமாக அனுப்பி வைக்கப்பட்டன.

2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கொவிட்-19 தொற்றுநோய் நிலவிய போதிலும் இ.வி.ஆ.கொ.ச. இன் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு அயராது உழைத்தமைக்காக சபையின் தலைவர் அவர்களுக்கும், சபை உறுப்பினர்களுக்கும், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு (கமுகு) உறுப்பினர்களுக்கும், சகல தேசிய குழுக்களின் உறுப்பினர்களுக்கும் நான் இறுதியாக எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வதற்கு விரும்புகின்றேன்.

பிரபாத் விமல் குமார
செயலாளர்/ பணிப்பாளர்
இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை

2020 ஆம் ஆண்டில் இ.வி.ஆ.கொ.ச. முன்னெடுத்த செயற்பாடுகள்

விவசாய ஆராய்ச்சிக் கொள்கை வகுத்தமைப்பு

கட்டாயப் பணிகளில் பின்வருவன உள்ளடங்குகின்றன.

- விவசாயஆராய்ச்சிவிடயங்களைஒழுங்கமைத்தல், ஒருங்கிணைத்தல், திட்டமிடுதல்மற்றும்நிறைவேற்றுதல், மற்றும்அமைச்சரினால்குறிப்பீடுசெய்யப்படாலம்எனும்சம்பந்தப்பட்டஅத்தகையஏனையவிடயங்கள்முதலியசகலவிடயங்கள்தொடர்பிலும்அரசாங்கத்திற்குஆலோசனைவழங்குதல் (1)

- தேசிய ஆராய்ச்சிக் கொள்கைகளையும் மற்றும் முன்னுரிமை சார்ந்த அம்சங்களையும் வகுத்தமைத்தல்(2)

- தேசிய அபிவிருத்திக் குறிக்கோள்களை மேலும் விரிவாக்கும் நோக்கில் விவசாய ஆராய்ச்சியின் ஒட்டுமொத்தக் குறிக்கோள்களையும் மற்றும் நோக்கெல்லையையும் வரையறுத்தல்(3)

- அரசாங்கத்திற்கும்மற்றும்விவசாயஆராய்ச்சிநிறுவகங்களுக்கும்இடையில்ஒருதொடர்பாடல்மார்க்கமாகத்தொழிற்படுதல் (7)

- விவசாய ஆராய்ச்சியுடன் தொடர்புடைய நிறுவகங்களுக்கு இடையில் காணப்படுகின்ற பிரச்சினைகள், தேசிய மற்றும் சர்வதேச விடய அம்சங்கள் என்பன தொடர்பான மாநாடுகளையும் மற்றும் கருத்தரைங்குகளையும் ஏற்பாடு செய்து வழங்குதல்(11)

2019ஆம் ஆண்டு காலப் பகுதியில் 25 தேசிய விவசாய ஆராய்ச்சி நிறுவகங்களின் (NARIs) ஆராய்ச்சி செயல் திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வு

தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமையின் ஆராய்ச்சித் தரவுத் தளம் பற்றிய விபரங்களை சேகரித்து பகுப்பாய்வு செய்வது இ.வி.ஆ.கொ.ச. இன் மிகவும் முக்கியமான கட்டாய பணிகளில் ஒரு பணியாகும். பெருந்-தோட்டம், பெருந்தோட்டம் சாராததுறைகள், மீன்பிடி, கால்-நடைகள், காடுகள் வளர்ப்பு மற்றும் பூந்தாவரங்கள் வளர்ப்பு முதலிய பிரிவுகளை உள்ளடக்கி, வித்தியாசமான அமைச்சுக்களின் கீழுள்ள 25 ஆராய்ச்சி நிறுவகங்களில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் முகமாக வருடாந்தம்அதிகளவு அரச நிதிகள் ஒதுக்கப்படுகின்றன. விவசாயத்தில் மேற்குறித்த துறைகளில் ஆராய்ச்சி சார்ந்த தேசிய முன்னுரிமைகளை இனங்காணும் பொறுப்புப் பணி ஒப்படைக்கப்பட்டுள்ள ஒரேயொரு நிறுவனம் இந்த வி.ஆ.கொ.ச. சபையாகும். ஆகையால், சரியான உகந்த தீர்மானங்களை எடுப்பதில் சம்பந்தப்படும் ஆராய்ச்சி முகாமையாளர்களுக்கும்மற்றும்ஆராய்ச்சியாளர்களுக்கும் அதே போல் பொதுத் திறைசேரிக்கும் ஒரு முகாமைத்துவ கருவியாக பயன்படுத்தும் பொருட்டுஆராய்ச்சிக் கருப்பொருட்களையும், கருத் திட்டங்களையும், வரவுசெலவு திட்டங்களையும் மற்றும் ஏனைய தகவல்களையும் சேகரிப்பது மிகவும் அவசியமாகும். குறித்த பகுப்பாய்வு முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பகுப்பாய்வின் முடிவுகள் பற்றி தெளிவுபடுத்தப்பட்டது. ***தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமையின் விவசாய ஆராய்ச்சி நிலை பற்றிய 2019 ஆம் ஆண்டு அறிக்கை*** இதன் இறுதி வெளியீடாகும். மிகவும் பயனுள்ள, அவசரநிலை ஆராய்ச்சி நிகழ்ச்சி நிரல்களுக்கான வளங்கள் ஒதுக்கீட்டை நகர்த்தும் தேவைமற்றும்ஆராய்ச்சிப் பிரிவுகள், ஆராய்ச்சி முன்னுரிமைகள் என்பவற்றின் அடிப்படையில், ஆராய்ச்சியில் நிலவும் இடைவெளிகளை

இனங்காணுவதற்கும் மற்றும் நாட்டின் விவசாயம் சார்ந்த ஆராய்ச்சி நிகழ்ச்சி நிரலில் தேவையான மாற்றங்களைக் கொண்டு வருவதற்கும்மற்றும் அந்தந்த அமைச்சுக்களுக்கும்பணிப்பாளர் நாயகங்களுக்கும், திறைசேரியின் தலைவர்களுக்கும் பல முக்கியமான செய்திகளை, இந்தப் பகுப்பாய்வு சென்றடையச்செய்துள்ளது.

விவசாயத் துறைக்கு கோவிட்-19 தொற்றுநோயால் ஏற்பட்டிருந்த தாக்கங்களின் நிமித்தம் அந்தத் துறைக்கு இ. வி. ஆ. கொ. ச. வழங்கிய குறுங்கால மற்றும் நடுத்தர கால ஆராய்ச்சி முன்னுரிமைகள் 2021-2025

கோவிட்-19 தொற்றுநோய்களின் தாக்கங்களினால் பாதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கு அவசரமாக முயற்சிக்க வேண்டியிருப்பதன் தேவையை வலியுறுத்தும் முகமாக இ. வி. கொ. ச. இன் 12 தேசிய குழுக்களினதும் தலைவர்கள் அழைக்கப்பட்டு அவர்களுக்கு என ஒரு மெய்நிகர் சந்திப்பு நடத்தப்பட்டது. தேசிய குழுக்களின் சகல ஏற்பாட்டாளர்களும் இந்த மெய்நிகர் சந்திப்பில் கலந்துகொண்டனர். கோவிட்-19 தொற்றுநோயால் விவசாயத் துறை பாதிக்கப்பட்டுள்ளதால் விவசாயத் துறைக்கு தேவையான குறுங்கால மற்றும் நடுத் தர கால ஆராய்ச்சி முன்னுரிமைத் திட்டங்களை வகுத்தமைப்பது இந்த மெய்நிகர் சந்திப்பின் குறிக்கோளாக இருந்தது. பெருந்தோட்டம், பெருந்தோட்டம் சாராத துறைகள், கால்நடைகள் மற்றும் கோழி வளர்ப்பு, நீரியல் சார்ந்த வளங்கள், காடு வளர்ப்பு மற்றும் பூந்தாவரங்கள் வளர்ப்பு முதலியன போன்ற ஆறு பிரிவுகளின் நிமித்தம் தேவையான குறுங்கால ஆராய்ச்சி முன்னுரிமைத் திட்டங்கள் வகுத்தமைக்கப்பட்டன. இந்த முன்னுரிமைத் திட்டங்கள் அடங்கிய ஆவணம் உரிய சகலஅமைச்சுக்களுக்கும், சலக NARS நிறுவனங்களுக்கும், தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கும்மற்றும் ஏனைய பொருத்தமான சகல அக்கறையுடைய தரப்புகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

கொள்கை சுருக்கம் - விவசாயத் துறையில் ஆராய்ச்சி முதலீடுகள்: உண்மையில் விவசாய ஆராய்ச்சியில் இலக்குக் கொள்கின்றோமா?

விவசாய ஆராய்ச்சிகளின் நிமித்தம் ஒதுக்கப்படும் திறைசேரி நிதிகளை ஆராய்ச்சி சம்பந்தமான திணைக்களங்களும் மற்றும் நிறுவனங்களும் அந்த நிதியை தகாத முறையில் கையாளுவது இலங்கையின் விவசாயத் துறை எதிர்நோக்கும் முக்கியமான ஒரு சவாலாகும். விவசாய ஆராய்ச்சி நிமித்தம் திறைசேரி தொடர்ச்சியாக நிதிகளை செலவிட்டு வருவதால் திறைசேரி நீண்டகால அடிப்படையில் கடுமையான பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரிடும். ஒவ்வொரு நிறுவனத்தினதும் ஆராய்ச்சி செயல் திட்டங்களை கவனமாக உரிய முறையில் கண்காணிப்பதன் ஊடாக பயனுள்ள நிதிகள் ஒருங்கிணைப்பும் மற்றும் நிதிகள் பட்டுவாடாவும் ஆராய்ச்சி நிதிகளின் தகாத பாவனையை குறைக்கவும் மற்றும் விவசாய ஆராய்ச்சியின் கட்புலனாகு நன்மைகளை அதிகரிக்கவும் உதவியாக அமையயும். திறைசேரிக்கு தகவல்கள் பற்றி பின்னூட்டல் செய்வதானது நிதிகள் செலவு செய்யப்படுவதை சீர்செய்து கொள்ளும் நிமித்தம் மிகவும் அத்தியாவசியமாகும்.

விவசாய ஆராய்ச்சிக்கு ஒதுக்கப்படுகின்ற நிதிகளின் தகாத பயன்பாடு எதிர்காலத்தில் மீள்வரையறைக்குட்படுத்தப்படுதல் வேண்டும் என இந்த கொள்கை சுருக்கம் முன்மொழிகின்றது. முதலாவது, கிடைக்கக் கூடிய ஆராய்ச்சி சார்ந்த நன்மைகளை கொண்டு நாட்டின் முன்னுரிமையின் அடிப்படையில், பல பிரிவு ஆராய்ச்சிக் குழுக்கள் வருடாந்தம் ஆராய்ச்சி பிரேரணைகளை தயாரிக்க வேண்டும். இது மிகச்சிறிய ஆராய்ச்சிக் கருத் திட்டங்களின் எண்ணிக்கையை குறைக்கும். இராண்டாவது, துறை சார் ஆராய்ச்சி முன்னுரிமைகளின் அடிப்படையில் இ. வி. ஆ. கொ. ச. இன் ஆறு துறை சார்ந்த குழுக்கள் இறுதியாக சிபாரிசு செய்யும் இந்த ஆராய்ச்சிக்

கருத் திட்டங்கள் ஆராய்ச்சி செயல் திட்டங்களில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். மூன்றாவது, எதிர்பார்த்த ஆராய்ச்சி சார்ந்த நன்மைகள் ஒவ்வொரு ஆராய்ச்சி முதலீட்டிலும் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும். மேலும், விவசாய ஆராய்ச்சி மீதான முதலீடு ஏற்கெனவேயிருக்கின்ற செயல்முறைகளை சீர்செய்த பின்னர் அதிகரிக்கப்படவும் வேண்டும். நான்காவது, ஆராய்ச்சிகள் இரட்டையடைவதை குறைத்துக் கொள்ளும் பொருட்டு நிறுவனங்களுக்கு இடையில் பல பிரிவு ஒருங்கிணைப்பு சார் ஆராய்ச்சி கூட்டொத்துழைப்பு மேம்படுத்தப்பட வேண்டும். ஐந்தாவது, வினைத்திறன் வாய்ந்த பயனுள்ள ஒரு ஆராய்ச்சி முகாமைத்துவ செயல்முறையை பேணும் பொருட்டு ஆராய்ச்சிக் கருத் திட்டங்களின் அடிக்கடி கண்காணிப்பு செயல்முறையாக பின்பற்றப்படுதல் வேண்டும்.

2020 ஆம் ஆண்டிற்கான தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டம்(NARP)

தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டம் என்பது விவசாயம் / விவசாயம் சம்பந்தமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமை (NARS) மற்றும் தேசிய பல்கலைக்கழக முறைமை ஆகியவற்றின் விவசாய ஆராய்ச்சி கருத் திட்டங்களை மேற்கொண்டு நிறைவேற்றும் முகமாக நிதி அளிக்கும் நிகழ்ச்சித் திட்டமாகும். குறித்த ஒரு காலப் பகுதிற்கு இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை இனங்காணும் முன்னுரிமை பிரிவுகளுக்கு இணங்க குறித்த இந்த கருத் திட்டங்கள் திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்படுகின்றன. தற்பொழுது நிதி விவசாயம் சம்பந்தமான ஆராய்ச்சிகளை மேற்கொள்கின்ற விவசாய திணைக்களம், விவசாய ஏற்றுமதிகள் திணைக்களம்மற்றும்பல்கலைக் கழகங்கள் என்பவற்றுக்கு வழங்கப்படுகின்றது. இந்த கருத் திட்டங்கள் 1 முதல் 3 ஆண்டுகள் வரையான ஒரு காலப் பகுதிற்கு வருடாந்தம் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

அடுத்து வருகின்ற ஆண்டிற்கு புதிய கருத் திட்டப் பிரேரணைகளை அழைத்தல், திறைசேரியிலிருந்து நிதி அளிக்கும் முகமாக சிபாரிசுகளை முன்வைப்பதற்கு இந்த பிரேரணைகளை மதிப்பீட்டிற்கு உட்படுத்துதல், நிகழும் ஆராய்ச்சிக் கருத் திட்டங்களின் முன்னேற்றத்தை அரையாண்டு ரீதியில் கண்காணித்தல், வருடாந்த ஸ்தல முன்னேற்ற கண்காணிப்பை மேற்கொள்ளல் மற்றும் இறுதி முனைய அறிக்கையை மதிப்பீட்டிற்கு உட்படுத்துதல் என்பன இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய பிரதான செயற்பாடுகளாகும். இந்த சபையின் அந்தந்த பொருத்தமான தேசிய குழுக்கள் இவற்றில் அதிகமான செயற்பாடுகளை மேற்கொள்கின்றன. 2020 ஆம் ஆண்டு முதல், இ. வி. ஆ. கொ. ச. ஆராய்ச்சி பிரேரணைகளை அழைக்க முன்னர் எண்ணக்கரு பத்திரங்களை அழைத்தல் போன்ற புதிய செயற்பாடுகளை இந்த நிகழ்ச்சித் திட்டத்தினுள் அறிமுகப்படுத்தியது. மதிப்பீட்டிற்கு உட்படுத்திய பின்னர் தேர்ந்தெடுத்த குறித்த எண்ணக்கரு பத்திரங்களுக்கு மாத்திரம் ஆராய்ச்சி பிரேரணைகள் அழைக்கப்பட்டன. இது தவிர, குறித்த ஆராய்ச்சிக் கருத் திட்டங்களை மதிப்பிடுவதற்கு / மீளாய்வு செய்வதற்கு பொருத்தமான விடயப் பிரிவில் நிபுணத்துவம் உடைய இரண்டு வெளிவாரி மீளாய்வு நிபுணர்களும் உள்ளனர்.

2020ஆம் ஆண்டு காலப் பகுதியில், தேசிய விவசாய ஆராய்ச்சி முறைமைமற்றும் பல்கலைக்கழக முறைமை ஆகிய முறைமைகள் 34எண்ணக்கரு பத்திரங்களை சமர்ப்பித்திருந்தன. இ. வி. ஆ. கொ.ச. சபையும் மற்றும் பொருத்தமான தேசிய குழுக்களும் இந்த எண்ணக்கரு பத்திரங்களை மதிப்பீடு செய்தன. தேர்ந்தெடுத்திருந்த 31 எண்ணக்கரு பத்திரங்களுக்கு மாத்திரம் பிரேரணைகள் அழைக்கப்பட்டன. முப்பத்தொரு ஆராய்ச்சி பிரேரணைகள் இ. வி. ஆ. கொ. ச. சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டன. இவற்றில் DOA (19) பிரேரணைகளையும், DEA (6) பிரேரணைகளையும், CRI (1) ஒரு பிரேணையையும், PRI (1) ஒரு

பிரேரணையையும், பல்கலைக்கழகங்கள் (4) பிரேரணைகளையும் சமர்ப்பித்திருந்தன. இவை தவிர, விவசாய ஏற்றுமதி திணைக்களம் திசம்பர் மாதம் பிற்பகுதியில் மேலும் 5 பிரேரணைகளை சமர்ப்பித்தது. ஒவ்வொரு பிரேரணையையும் இரண்டு வெளிவாரி மீளாய்வு நிபுணர்கள் மதிப்பீடு செய்தனர். மெய்நிகர் சந்திப்புகள் ஊடாக நடைபெற்ற கலந்துரையாடல்களினதும் மீளாய்வு அறிக்கைகளினதும் அடிப்படையில், அந்த மெய்நிகர் சந்திப்புகளின் போது முன்வைத்திருந்த மீளாய்வுகளையும் மீளாய்வு நிபுணர்கள் முன்வைத்த மீளாய்வுகளையும் அடையாளப்படுத்துவதற்கான நிதியிடும் விடயத்தின் நிமித்தம் 29கருத் திட்டங்கள் சிபாரிசு செய்யப்பட்டன. குறித்த கருத் திட்டங்கள் மீளாய்வு நிபுணர்கள் வழங்கிய புள்ளிகளின் அடிப்படையில் தரப்படுத்தப்பட்டன. இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகம் சமர்ப்பித்த ஒரு கருத் திட்டப் பிரேரணை மீளாய்வு நிபுணர்களின் சிபாரிகளுக்கும் மற்றும் மெய்நிகர் சந்திப்புகளின் போது எடுத்த தீர்மானங்களுக்கும் இணங்க நிராகரிக்கப் பட்டது. கமத்தொழில் அமைச்சு NARPவரவுசெலவுத்திட்டத்தை தயாரித்து திறைசேரிக்கு சமர்ப்பித்தது.

2020ஆம் ஆண்டு காலப் பகுதியில் இயங்கிய மொத்த கருத் திட்டங்கள் 51 ஆகும்.(இவற்றில் விவசாய திணைக்களத்தின் 37கருத் திட்டங்கள், விவசாய ஏற்றுமதி திணைக்களத்தின் 08 கருத் திட்டங்கள் மற்றும் தேசிய பல்கலைக்கழகங்களின் 06 கருத் திட்டங்கள் என உள்ளடங்கியிருந்தன).NARP கருத் திட்டங்களுக்கு இ. வி. ஆ. கொ. ச. ஒதுக்கியவாறு நிதிகள் PIs களுக்கு வழங்கப்படவில்லை. நாட்டில் கொவிட்-19 தொற்றுநோய் நிலை காணப்பட்டமை இதற்கான காரணமாகும். ஆகையால், அரையாண்டு ரீதியான முன்னேற்ற கண்காணிப்பும் மற்றும் ஸ்தல கருத் திட்டங்கள் கண்காணிப்பும் மேற்கொள்ளப்படவில்லை. இரு முனைய அறிக்கைள் மதிப்பீடு செய்யப்பட்டன. எஞ்சிய அத்தகைய

முனைய அறிக்கைகள் நிதிகள் கிடையாததால் மதிப்பீடு செய்யப்படவில்லை.

இ. வி. ஆ. கொ. ச. தேசிய குழுக்கள்

i) விவசாய உயிரியல் பற்றிய தேசிய குழு(NCAB)

2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில், நாட்டில் தொற்றுநோய் நிலவியதால் குழு கூட்டங்கள் எதுவும் நடத்தப்படவில்லை. எவ்வாறாயினும், குழுவின் முகாமைத்துவ செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு ஒன்லைன், தொலைத்தொடர்பு வசதிகளை பயன்படுத்தி அத்தகைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலைய (RRDI) பணிப்பாளர் கலாநிதி ஜயந்த சேனாநாயக்க குழுவின் தலைவராக பணியாற்றினார். இ. வி. ஆ. கொ. ச. ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு லகூஷித்த ஹெட்டிஆராச்சி குழுவுக்கான செயலாளராக/ஒருங்கிணைப்பு அதிகாரியாக பணியாற்றினார்.

முன்னைய ஆண்டுகளில் முடிவுறுத்திய கருத் திட்டங்களின் நிமித்தம் மூன்று முனைய அறிக்கைகள் கிடைத்தன. அந்த அறிக்கைகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. அரிசியின் மேம்பட்ட பொசுபரஸு போஷனையின் நிமித்தம் ஒரு பொசுபரஸு மைய உயிரியல் உரத்தை தயாரித்தல் - கொழும்பு பல்கலைக்கழகம்
2. *Hevea brasiliensisஇல்* இருந்து இறப்பர் இலங்கேஷன் காரணி சார்ந்த மரபணு தொடர் பகுதியளவுகளை மேம்படுத்தும் தொழிற்பாட்டு பகுப்பாய்வு - இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்
3. தேர்ந்தெடுத்த பழப் பயிர்களுக்கான பப்பாசி, சிற்றரஸ்மற்றும் அன்னாசி போன்ற விஷேட பழ வர்க்கங்கள்) இனப்பெருக்கம் சார்

நுட்பங்களின் ஊடாக வைரஸ் நோய் நீங்கிய தாவர நடுகைக் கன்றுகளை உற்பத்தி செய்வதாற்கான தொழில் நுட்பங்களை அபிவிருத்தி செய்தல் - தாவர வைரஸ் சுட்டி நிர்ணய நிலையம் (PVIC) -விவசாய திணைக்களம்

தேசிய பல்கலைக்கழக முறைமையிலிருந்து (NUS) (01) கருத் திட்டமும் மற்றும் விவசாய திணைக்களத்திலிருந்து (DOA) (02) கருத் திட்டங்களும் என குறித்த ஆண்டு காலப் பகுதியில் சிபாரிசுகளுக்கு என மூன்று கருத் திட்டங்கள் கிடைத்திருந்தன.

ii) விவசாயம் மற்றும் பயிர் மேம்பாடு பற்றிய தேசிய குழு (NCCIA)

2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில்பயரங்க கொவிட்-19 தொற்றுநோய் நிலவியதாலும் மற்றும் மூலதன நிதிகள் கிடையாததாலும் 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில், குழுக் கூட்டங்கள் நடத்தப்படவில்லை. தாவர மரபணு வள நிலையத்தின் மேலதிக பணிப்பாளர் கலாநிதி எஸ்.கே. வாசல குழுவின் தலைவராக பணியாற்றிய அதே வேளையில் இ. வி. ஆ. கொ. ச. இன் சிரேஷ்ட விஞ்ஞானிகளான கலாநிதி சி. பத்மினி மற்றும் கிரிஹகம ஆகியோர் குழுவின் செயலாளர்களாக /ஒருங்கிணைப்பு அதிகாரிகளாக தொடர்ந்து பணியாற்றினார்கள்.

இந்த ஆண்டு காலப் பகுதியில், விவசாய திணைக்களம் முன்வைத்த 15 கருத் திட்டங்களும் மற்றும் விவசாய ஏற்றுமதி திணைக்களம் முன்வைத்த 04 கருத் திட்டங்களும் அடங்கலாக 19 கருத் திட்டங்கள் செயற்படுத்தப் பட்டன. இந்த சகல கருத் திட்டங்களும் தொடர்ந்து இயங்கின. ஆனால், கொவிட்19 தொற்றுநோய் நிலவியதாலும் மற்றும் நிதி கிடையாததாலும், ஒதுக்கிய மொத்த நிதிகள் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. ஆகையால், இந்த ஆண்டு காலப் பகுதியில் முன்னேற்றம் கண்காணிக்கப்படவில்லை.

இந்த ஆண்டின் போது இந்த குழு பதினைந்து எண்ணக்கரு பத்திரங்களை மதிப்பீடு செய்தது. விவசாயமும் மற்றும் பயிர் மேம்பாடும் பற்றிய குறுங்-கால மற்றும் நடுத்தர கால ஆராய்ச்சி முன்னுரிமைத் திட்டங்கள் பட்டியல் தயாரிக்கப்பட்டது.

iii) காடு வளர்ப்பு பற்றிய தேசிய குழு

பேராசிரியர் ஹேமந்த ரணசிங்க அவர்களும் மற்றும் திருமதி சி. தவுலகல அவர்களும் காடுகள் வளர்ப்பு பற்றிய இந்த தேசிய குழுவின் முறையே தலைவராகவும் ஒருங்கிணைப்பு அதிகாரியாகவும் /செயலாளராகவும் பணியாற்றினார்கள். 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில், இந்த தேசிய குழு பௌதீக கூட்டங்களை நடத்தவில்லை. திட்டமிடப்பட்டிருந்த பணிகள் பொது மக்கள் ஒன்றுகூடுவது பற்றிய கொவிட்-19 மட்டுப்பாடுகளினால் பிற்போடப்பட்டன. Whatsapp குழு மற்றும் மின்னஞ்சல் அகியவற்றின் ஊடாக மெய்நிகர் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.'ஹோட்டன் சம தரையில் வனங்கள் அழிவதால் நீர் அழுத்தத்தினதும் மற்றும் காலநிலை மாற்றத்தினதும் வகிபங்கு பற்றிய ஆய்வு' எனும் NARP/NUS ஆராய்ச்சிக் கருத் திட்டத் தலைப்பில் எண்ணக்கரு பத்திரமும் மற்றும் ஆராய்ச்சிப் பிரேரணைகளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டன. 'ஹோட்டன் சம தரை தேசிய பூங்காவிலுள்ள மென்டேக் வனாந்திரத்தில் காடுகள் அழிதல் மற்றும் காடுகள் மீள்வளர்ப்பு சாத்தியங்கள் பற்றிய மதிப்பீடு' என்ற தலைப்பில் முனைய அறிக்கை கிடைத்தது. அது மதிப்பீட்டிற்காக தயார் படுத்தப்பட்டது.

iv) இயற்கை விவசாயம் பற்றிய தேசிய குழு

பbஓ-பூfட்ஸ் லிமிற்றட் நிறுவனத்தின் தலைவர் கலாநிதி சரத் ரணவீரமற்றும் திருமதி சி. தவுலகல ஆகியோர் இயற்கை விவசாயம் பற்றிய இந்த தேசிய குழுவில் முறையே தலைவராகவும் மற்றும்

ஒருங்கிணைப்பு அதிகாரியாகவும் /செயலாளராகவும் பணியாற்றினார்கள். 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில், இந்த தேசிய குழு பௌதீக கூட்டங்களை நடத்தவில்லை. இயற்கை விவசாய ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்கு என திட்டமிடப்பட்டிருந்த இயற்கை விவசாய ஆராய்ச்சி பற்றிய ஒரு வேலையரங்கு பொது மக்கள் ஒன்றுகூடுவது தொடர்பான கொவிட்-19 மட்டுப்பாடுகளினால் பிற்போடப்பட்டது. மின்னஞ்சல் தொலைபேசி ஆகிய வசதிகள் ஊடாக மெய்நிகர் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. 03 எண்ணக்கரு பத்திரரங்களும் மற்றும் 02ஆராய்ச்சி பிரேரணைகளும் மதிப்பீடு செய்யப்பட்டன.

v) விவசாய பொறிமுறைப்படுத்தல் பற்றிய தேசிய குழு

ஆராய்ச்சி சார்ந்த தேவைகளை இனங்கண்டு விவசாய பொறிமுறைப் படுத்தல் பற்றிய கொள்கைகளை வகுத்தமைப்பது இ. வி. ஆ. கொ. ச. இன் விவசாய பொறமுறைப்படுத்தல் பற்றிய தேசிய குழுவின் வகிபங்காகும். இலங்கையில் விவசாய துறைக்கு விவசாயத்தை பொறிமுறைப்படுத்தல் பற்றிய சரியான தொழில் நுட்பங்களை தயாரிப்பதிலும் மற்றும் பரம்பல் செய்வதிலும் காத்திரமாக ஈடுபடுகின்ற அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் ஊழியர்களை இந்த குழு உறுப்பினர்களாக கொண்டு காணப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஒரு மெய்நிகர் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டது. தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தின் கலாநிதி எம். ஏ. விஜேரத்ன இந்த குழுவினது தலைவராக பணியாற்றியானர். அதே வேளையில் இ. வி. ஆ. கொ. ச. இன் ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு சமீர திஸாநாயக்க இந்த குழுவின் செயலாளராக/ ஒருங்கிணைப்பு அதிகாரியாக தொடர்ந்து பணியாற்றினார்.

vi) நீரியல் வளங்கள் பற்றிய தேசிய குழு(NCAR)

திரு மொன்டி ரணதுங்க இந்த குழுவின் தலைவராக பணியாற்றியுள்ளார். கலாநிதி ப்ராங் நிரஞ்ஜன் அவர்கள் இந்த குழுவின் ஒருங்கிணைப்பு அதிகாரியாக /செயலாளராக பணியாற்றியுள்ளார். குறுங்கால, நடுத்தர கால ஆராய்ச்சி முன்னுரிமை திட்டங்களை வகுத்தமைக்கும் பொருட்டு இந்த ஆண்டு காலப் பகுதியில் மெய்நிகர் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டன. குறைவாக பயன்படுத்தப்படும் மீன்கள் மற்றும் கடல் மரபணு வளங்கள் மற்றும் அவற்றின் மேம்பாட்டு வளர்ச்சிகள் என்பன பற்றிய பிராந்திய வேலையரங்கு நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டன. துறை சார்ந்த ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்தும் பொருட்டு குறுங்கால ஆராய்ச்சி முன்னுரிமை திட்டங்கள் இனங்காப்பட்டன. 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஒரு ஆராய்ச்சிப் பிரேரணை மதிப்பிடப்பட்டு NARP நிதியளிப்பின் நிமித்தம் சிபாரிசு செய்யப்பட்டது.

vii) பூந்தாவர வளர்ப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பற்றிய தேசிய குழு(NCFRD)

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் (DNBG) பணிப்பாளர் நாயகம் கலாநிதி செலோமி கிரிஷ்ணராஜா அவர்கள் இந்த தேசிய குழுவின் தலைவராக பணியாற்றியுள்ளார்கள். இ. வி. ஆ. கொ. ச. சபையின் சிரேஷ்ட விஞ்ஞானி கலாநிதி எஸ். எம். பி. சந்திரா பத்மினி அவர்கள் இந்த குழுவின் செயலாளராக /ஒருங்கிணைப்பு அதிகாரியாக பணியாற்றியுள்ளார்கள். 2020 ஆம் ஆண்டிற்கான NASFLOR ஐ ஏற்பாடு செய்வதற்காகவும், பதின் மூன்றாவது (13$^{-வது}$ NASFLOR) மெய்நிகர் பூந்தாவர வளர்ப்பு ஆராய்ச்சி மாநாட்டை நடத்துவதற்காகவும் 2020ஆம் ஆண்டு காலப் பகுதியில்,இரண்டு மெய்நிகர் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டன. மேலும் 2020 ஆம் ஆண்டிற்கான NASFLOR நடவடிக்கைகளும் பிரசுரிக்கப்

பட்டன. 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் NARP நிதியளிக்கும் முகமாக ஒரு ஆராய்ச்சிக் கருத் திட்டம் மதிப்பிடப்பட்டு சிபாரிசு செய்யப்பட்டது. நாட்டில் பூந்தாவர வளர்ப்பு பிரிவை மேம்படுத்துவதற்கும், ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கும் என ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் ஒத்துழைப்புடன் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு திறமுறைத் திட்டம் தயாரிக்கப்பட்டது. துறை சார்ந்த நிகழ்ச்சித் திட்டங்களை மேம்படுத்தும் முகமாக குறுங்கால ஆராய்ச்சி முன்னுரிமைகள் இனங்காணப்பட்டன.

viii) கால்நடைகள் மற்றும் கோழி வளர்ப்பு பற்றிய தேசிய குழு(NCLP)

ருஹுணு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் தக்ஷிலா சேரசிங்க அவர்கள் இந்த குழுவின் தலைவராக பணியாற்றினார்கள். இ. வி. ஆ. கொ. ச. சபையின் ஆராய்ச்சி உத்தியோகத்தர் திரு சமீர திஸாநாயக்க அவர்கள் தொடர்ந்து இந்த குழுவின் செயலாளராக /ஒருங்கிணைப்பு அதிகாரியாக பணியாற்றினார்கள். கால்நடைகள் பிரிவுக்கு தேவையான குறுங்கால ஆராய்ச்சி முன்னுரிமை திட்டங்களை தயாரிக்கும் பொருட்டு மெய்நிகர் கூட்டங்கள் நடத்தப்பட்டன. மூன்று NARPகருத் திட்டங்கள் மதிப்பிடப்பட்டு அவை 2021 ஆம் ஆண்டிற்கான ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் நிமித்தம் சிபாரிசு செய்யப்பட்டன. மெய்நிகர் கூட்டங்களை நடத்தியதன் மூலமாக குறித்த பிரிவின் நிமித்தம் எதிர்கால ஆராய்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன.

ix) இயற்கை வளங்கள் முகாமைத்துவம், நிலையான விவசாயம் மற்றும் காலநிலை மாற்றம் பற்றிய தேசிய குழு(NCNRMSACC)

கமத்தொழில் அமைச்சினது மேலதிக செயலாளரான கலாநிதி அஜந்த த சில்வா அவர்கள் இந்த குழுவின் தலைவராக பணியாற்றியுள்ளார்கள். இ. வி. ஆ. கொ. ச. சபையின் சிரேஷ்ட விஞ்ஞானி கலாநிதி எஸ். எம். பி. சந்திரா பத்மினி அவர்கள் இந்த குழுவின் ஒருங்கிணைப்பு அதிகாரியாக

/ செயலாளராக உதவினார்கள். ஆராய்ச்சி சார்ந்த ஏழு பிரேரணைகள் மதிப்பிடப்பட்டு அவற்றில் ஐந்து ஆராய்ச்சிப் பிரேரணைகள் நிதியளிப்பு நிமித்தம் சிபாரிசு செய்யப்பட்டன.

x) தாவரங்கள் பாதுகாப்பு பற்றிய தேசிய குழு (NCPP)

இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தின் பிரதி பணிப்பாளரான (ஆராய்ச்சி) கலாநிதி திரு கீர்த்தி மொஹட்டி அவர்கள் இந்த குழுவின் தலைவராக பணியாற்றினார். இ. வி. ஆ. கொ. ச. சபையின் சிரேஷ்ட விஞ்ஞானி கலாநிதி சானிக்கா ஜயசேக்கர அவர்கள் இந்த குழுவின் ஒருங்கிணைப்பு அதிகாரியாக /செயலாளராக பணியாற்றினார்கள். கொவிட்-19 தொற்றுநோய் நிலவியதால், தாவரங்கள் பாதுகாப்பு பற்றி ஒன்லைன் ஊடாக கலந்துரையடால்கள் இடம்பெற்றன. ஆராய்ச்சிகளின் முன்னேற்றத்தின் அடிப்படையில் ஒரு மாதிரிப் படிவத்தை தொகுப்பதன் மூலம் ஆராய்ச்சி கருத் திட்டங்களின் முன்னேற்ற மதிப்பீடுகள் கோரப் பட்டன. தலைமை ஆய்வாளர்களிடமிருந்து நிறைவு செய்யப்பட்டிருந்த ஆராய்ச்சிக் கருத் திட்டங்களின் முனைய அறிக்கைகள் சேகரிக்கப்பட்டன. தாவரங்கள் பாதுகாப்பு விடயத்தில் சுருக்க ஆராய்ச்சி வெளியீடுகளை சேகரிக்கும் பொருட்டு ஆராய்ச்சி வெளியீடுகள் தொடர்பான ஒரு மாதிரிப் படிவம் வடிவமைக்கப்பட்டது. சுருக்கமான ஒரு கொள்கையை தொகுக்கும் பொருட்டு தாவரங்கள் பாதுகாப்பு ஆராய்ச்சி கொள்கையிலும் மற்றும் பூச்சிநாசினிகளின் பாவனையிலும் இலக்கிய ரீதியான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இரண்டு புதிய ஆராய்ச்சிப் பிரேரணைகள் கிடைத்தன. இரண்டு ஆராய்ச்சிக் கருத் திட்டப் பிரேரணைகளும் 2021 ஆம் ஆண்டில் வழங்கும் முகமாக மதிப்பீடு செய்யப் பட்டன. தாவரங்கள் பாதுகாப்பு விடயத்தில் குறுங்கால, நடுத்தர கால மற்றும் நீண்டகால ஆராய்ச்சி முன்னுரிமைகள் வகுத்தமைக்கப்பட்டன.

xi) அறுவடைக்கு பின்-தொழில் நுட்பம் மற்றும் மானிட போஷாக்கு பற்றிய தேசிய குழு(NCPTHN)


உணவு விவசாய அமைப்பின் உதவிப் பிரதிநிதி கலாநிதி டீ. பீ. ரீ. விஜேரத்ன அவர்கள் இந்த தேசிய குழுவின் தலைவராக பணியாற்றினார்கள். மேலும் கலாநிதி சானிக்கா ஜயசேக்கர அவர்கள் இந்த குழுவின் ஒருங்கிணைப்பு அதிகாரியாக /செயலாளராக பிணயாற்றினார்கள். கொவிட்-19 தொற்று நோய் நிலவியதனால், ஒன்லைன் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. ஆராய்ச்சி முன்னேற்றம் பற்றிய ஒரு மாதிரிப் படிவத்தை தொகுப்பதன் மூலம் ஆராய்ச்சிக் கருத் திட்டங்களின் முன்னேற்ற மதிப்பீடுகள் கோரப் பட்டன. 2020ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஐந்து ஆராய்ச்சி பிரேரணைகள் கிடைத்தன. அந்த சகல ஐந்து கருத் திட்டப் பிரேரணைகளும் 2021 ஆம் ஆண்டில் வழங்கலின் நிமித்தம் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டன. மேலும் அறுவடைக்கு பின்-தொழில் நுட்பம் மற்றும் மானிட போஷாக்கு ஆகிய விடயத்தில் குறுங்கால, நடுத்தர கால மற்றும் நீண்டகால ஆராய்ச்சி முன்னுரிமைகள் வகுத்தமைக்கப்பட்டன.

xii) சமூகப் பொருளாதார மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு பற்றிய தேசிய குழு(NCSEPA)

விவசாய திணைக்களத்தின் சமூகப் பொருளாதார திட்டமிடல் நிலைய தலைவர் கலாநிதி ஆர். எம். ஹேரத் அவர்கள் இந்த தேசிய குழுவின் தலைவராக பணியாற்றினார்கள். கலாநிதி ப்ராங் நிரஞ்சன் அவர்கள் இந்த தேசிய குழுவின் ஒருங்கிணைப்பு அதிகாரியாக /செயலாளராக பணியாற்றினார்கள். குறுங்கால, நடுத்தர கால மற்றும் நீண்டகால ஆராய்ச்சி முன்னுரிமைகளை வகுத்தமைக்கும் பொருட்டு இந்த ஆண்டு காலப் பகுதியில் மெய்நிகர் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டன.

2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நடத்திய வேலையரங்குகள் மற்றும் மாநாடுகள்





2020 ஆம் ஆண்டிற்கான பூந்தாவர வளர்ப்பு ஆராய்ச்சி பற்றிய 13-வது தேசிய மாநாடு(13-வது NASFLOR -2020)

இந்த துறையில் அண்மை கால ஆராய்ச்சி முடிவுகளை குறிப்பிட்டு கலந்துரையாடும் முகமாக இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபையும் மற்றும் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களமும் இணைந்து ஒருமெய்நிகர் மாநாடாக 2020 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 11 ஆம் திகதி பூந்தாவர வளர்ப்பு ஆராய்ச்சி பற்றிய வருடாந்த தேசிய மாநாட்டை (NASFLOR-2020) ஏற்பாடு செய்திருந்தன. ஆராய்ச்சியாளர்கள், பூந்தாவரங்களை வளர்க்கும் தரப்புகள், ஏற்றுமதி தரப்புகள் மற்றும் கொள்கை ஆக்கும் தரப்புகள் முதலியோர் இந்த மாநாட்டில் பங்குபற்றி இந்த துறையை அபிவிருத்தி செய்வதற்கு தமது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்கள். பூந்தாவரங்கள் வளர்ப்பு பிரிவு சம்பந்தமான பதினாறு ஆராய்ச்சிப் பத்திரங்களை ஆராய்ச்சியாளர்கள் முன்வைத்தனர். அந்த ஆராய்ச்சிப் பத்திரங்கள் ஆறு வகுதிகளாக வகைப்படுத்தப்பட்டன.

இ. வி. ஆ. கொ. ச. சபையிலுள்ள பாவனைக்கொவ்வாத பொருட்களை அகற்றுவதற்கான பொது ஏல விற்பனை - 2020

இந்த சபையின் வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பு குழுவின் மூலமாக இனங்காணப்பட்டிருந்த பாவனைக்கொவ்வாத பொருட்களை அகற்றும் பொருட்டு 2020 ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் ஒரு பொது ஏலம் நடத்தப் பட்டுள்ளது.

விவசாய ஆராய்ச்சி முகாமைத்துவம்

உள்ளடங்கும் கட்டாய பணிகள்

- விவசாய ஆராய்ச்சி நிறுவகங்களுக்கும் மற்றும் தாபனங்களுக்கும் தேவையான நிதி, மனித வலு மற்றும் பௌதீக வளங்கள் என்பன தொடர்பிலும் மற்றும் அத்தகைய நிறுவனங்களினதும், தாபனங்களினதும் ஊழியர்களின் சேவை தொடர்பான நியதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பிலும் பொருத்தமான உரிய அதிகார சபைகளுக்கு சிபாரிசுகளை முன்வைத்தல்(4)

- நிறுவனம் மற்றும் திணைக்களம் சார்ந்த விவசாய ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களை மீளாய்வு செய்து நிதி மற்றும் திட்டமிடல் விடயத்திற்குப் பொறுப்புடைய அமைச்சரின் அமைச்சுக்கு, நிதியளிப்பின் நிமித்தம் முன்னுரிமை சார்ந்த விடயங்கள் தொடர்பான சிபாரிசுகளை முன்வைத்தல்(5)

- விவசாய ஆராய்ச்சிக் கருத் திட்டங்களினதும், மற்றும் நிறுவகங்களினதும் மற்றும் பிரிவுகளினதும் செயலாற்றுகையை அவ்வப்பொழுது மீளாய்வு செய்தல்(13)

விவசாய ஆராய்ச்சி முகாமையாளர்களுக்கான தகவல்(INFORM)

